# 26. பெரும்பேறு

இருபத்து நான்கு சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

திருவளர் பரங்கிரி திருச்செந்தி லஞ்சோலை
திருவேர கம்பழநிமா
திரங்குன்று தோறாட லென்றறையும் வரைகளிற்
சேர்திருத் தணிகைபொதிகை
சித்தர்மலை கந்தகிரி திருவேங்க டஞ்சிறிய
திருமலை விராலியோங்கல்
திருவுரு விலங்கல்ரஜி தாசலங் கழுகோதி
சிவசயிலம் வேள்வியசலம்

மருவளரு மேருகிரி சீசயில நீலகிரி
மயிலநா கஞ்சிகண்டி
மலைகொல்லி மலைபன்றி மலையருண கிரியென்னு
மலைபுள்ளி ருக்கும்வேளூர்
வள்ளியூர் குமரகோட் டங்கொடும ளூர்கதிரை
மகிமைசால் சமராபுரி
வனப்பே றிலஞ்சிந லரிப்பா டுடுப்பைநகர்
மதுகைவே லூரெண்கணூர்

குருவள ரரும்பூண்டி நன்செய்நிமிர் மேட்டுக்
குடித்தலந் தில்லைமுதலாங்
கோவில்களி னும்பரம பத்தர்களி னிருதய
குசேசயங் களினுமுறைவாய்
குயிலரிய வண்டங்க ளெங்கணு மிருப்பாய்
குணித்துப் பிரிக்கவரிதாய்க்
குடிலங்க ளுக்குமொரு குடிலமென நிற்பாய்
குரங்குவா ரெண்ணுவண்ணம்

அருவளரு முள்ளத்து ளேயுணர்ந் தருளுவா
யடியனென் றுன்புதபுத
ஆற்றுநின் பேருளத் துள்கா திருப்பினா
னாரிட முரைப்பனெந்தாய்

---

1. **பொதிகை** = பொதியம் என்பதன் சிதைவு. **குசேசயம்** = தாமரை; **சூ – நிகண்டும், அமரஸிம்ஹமும்** காண்க. **குடிலம்** = ஆகாயம். **குரங்குதல்** = தாழ்தல்.

**அயில்வேலு மாண்டலைத் துவசமு மலங்கவென்**
**னம்மைதெய் வானைவல்லி**
**அருகிருந் தருளமா மயிலுகைத் தெதிரில்வந்**
**தருள்பெரும் பேற்றுமுருகே.**

திருவளர் பரங்கிரி திருச்செந்தில் அம் சோலை
திருவேரகம் பழநிமா
திரம் குன்று தோறாடல் என்று அறையும் வரைகளில்
சேர் திருத்தணிகை பொதிகை
சித்தர்மலை கந்தகிரி திருவேங்கடம் சிறிய
திருமலை விராலி ஓங்கல்
திருவுரு விலங்கல் ரஜி தாசலம் கழு குஒதி
சிவசயிலம் வேள்வி அசலம்

மருவளரு மேருகிரி சீசயில நீலகிரி
மயிலநாகம் சிகண்டி
மலைகொல்லி மலைபன்றி மலை அருணகிரி என்னு
மலை புள்ளிருக்கும் வேளூர்
வள்ளியூர் குமரகோட்டம் கொடுமளூர் கதிரை
மகிமை சால் சமராபுரி
வனப்பு ஏறு இலஞ்சிநல் அரிப்பாடு உடுப்பை நகர்
மதுகை வேலூர் எண்கண் ஊர்

குருவளர் அரும் பூண்டி நன்செய்நிமிர் மேட்டுக்
குடித்தலம் தில்லை முதலாம்
கோவில்களினும் பரம பத்தர்களின் இருதய
குசேசயங்களினும் உறைவாய்
குயில் அரிய அண்டங்கள் எங்கணும் இருப்பாய்
குணித்துப் பிரிக்க அரிதாய்க்
குடிலங்களுக்கும் ஒரு குடிலம் என நிற்பாய்
குரங்குவார் எண்ணும் வண்ணம்

அருவளரும் உள்ளத்துளே உணர்ந்து அருளுவாய்
அடியன் என் துன்பு தபுத
ஆற்றுநின் பேருளத்துஉள்காது இருப்பின் நான்
ஆரிடம் உரைப்பன் எந்தாய்
அயில்வேலும் ஆண்டலைத் துவசமும் அலங்கஎன்
அம்மை தெய்வானை வல்லி
அருகு இருந்து அருள் மாமயில் உகைத்து எதிரில் வந்து
அருள் பெரும் பேற்று முருகே.

அழகு நிலைபெறும் திருப்பரங்கிரி, திருச்செந்தில், அழகிய பழமுதிர்சோலை, திருவேரகம், திருப்பழநிமலை, குன்றுதோறாடல் என்று கூறப்படும் மலைகளில் சேரும் திருத்தணிகை, பொதியமலை, சித்தர்மலை, கந்தகிரி, திருவேங்கடம், சிறிய திருமலை, விராலிமலை, திருவுருமலை, வெள்ளிமலை(ரஜிதாசலம்) கழுகுமலை, சிவமலை, வேள்விமலை, மணம் நிலைபெற்ற மேருமலை, ஸ்ரீசைலம், நீலகிரி, மயிலமலை, சிகண்டிமலை, கொல்லிமலை, பன்றிமலை திருவண்ணாமலை, புள்ளிருக்கும் வேளூர், வள்ளியூர், குமர கோட்டம், கொடுமளூர், கதிர்காமம், மகிமை மிகுந்த திருப்போரூர், அழகுமிகும் இலஞ்சி, அரிப்பாடு, உடுப்பை நகர், வெற்றி பொருந்திய வேலூர், எண்கண் ஊர், தூய நீர்பெருகும் பூண்டி, நன்செய் மிகுந்த மேட்டுக்குடித்தலம், தில்லை(சிதம்பரம்) முதலாகிய திருக்கோவில்களிலும், பரம பத்தர்களின் இருதய தாமரைகளிலும் எழுந்தருளுவாய்! சொல்லுதற்கு அரிய அண்டங்களிலும் இருப்பாய்! அளவிட்டுப் பிரித்தற்கு அரிதாய ஆகாயத்திற்கும் ஓர் ஆகாயமாய் நிலைபெறுவாய்! வணங்குவார் நினைக்கும் வண்ணம் கடவுள் நினைப்பு வளரும் மனத்துள் அறிந்து அருளுவாய்! அடியவனாகிய என் துன்பத்தை ஒழிக்கும் உன் பெரிய திருவுளத்தில் என்னை நினைக்காதிருப்பின் எம் தந்தையே நான் யாரிடம் சொல்வேன்? கூரிய வேற்படையும் கோழிக்கொடியும் அசைந்து விளங்க, என் அம்மை தெய்வயானையும் வள்ளியும் உன் இருபக்கமும் இருந்து அருளப் பெரிய மயில் வாகனத்தைச் செலுத்தும் பெரும்பேற்று முருகனே! என் எதிரில் வந்து அருள்புரிவாயாக! 1